**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்செந்தூர்.**
**முன்னிலை : திரு. மீ. வ உ சிதம்பரம், பி.ஏ., எம். எல்.,**
**நீதித்துறை நடுவர், திருச்செந்தூர்**
**2026 ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் 9 ஆம் நாள் திங்கட்கிழமை**
**Crl.M.P.No. 232 of 2026**

விக்னேஷ், வயது 26,
த/பெ. லெட்சுமணன்,
எண். 36 ஈ, பூந்தோட்டம்,
காயல்பட்டினம். . . . மனுதாரர்/எதிரி

...எதிர்...

<u>**அரசுக்காக :–**</u>
காவல் உதவி ஆய்வாளர்,
ஆறுமுகநேரி காவல் நிலையம்.
குற்ற எண். 129/2026 . . . எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

மனுதாரருக்கு பிரிவு 4(1)(A), 14(A) TNP Amendment Act 2024 இன் கீழான குற்றங்களுக்கு பிணை வழங்க கேட்டு பிரிவு **480 BNSS** இன் கீழ் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் தரப்பு வழக்கறிஞர்: திரு. M.P. ஆல்பர்ட் துரை
எதிர்மனுதாரர் வழக்கறிஞர் : திருமதி. வனிதா, அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் நிலை–1

<u>**உத்தரவு**</u>

1. மனுதாரர்/எதிரி எந்த குற்றத்தையும் செய்யவில்லை என்றும், அவருக்கு எதிராக எதிர்மனுதாரர் காவல்நிலையத்தில் பிரிவுகள் 4(1)(A), 14(A) TNP Amendment Act 2024 இன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரர்/எதிரி கடந்த 07.02.2026 ஆம் தேதியில் இருந்து நீதிமன்ற காவலில் இருந்து வருவதாகவும், அவருக்கு பிணையம் வழங்கும் போது தக்க பிணையதாரர்களை முன்னிலைப்படுத்த தயாராக இருப்பதாகவும் மனுதாரர் தரப்பில் கூறி, இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

2. மனுதாரர்/எதிரியை பிணையில் விடுவித்தால் இவ்வழக்கானது புலன் விசாரணையில் இருந்து வருவதாலும், மேற்படி எதிரி சட்ட விரோதமாக மதுபானங்கள் வங்கி அதிக விலைக்கு விற்பது மேற்படி செயல்களில் ஈடுபட்டு வருவதால் மேற்படி எதிரியை ஜாமினில் வெளியே விட்டால் மீண்டும் இது போன்ற செயல்களில் ஈடுபடக்கூடும் என்பதாலும், வழக்கு விசாரணைக்கு ஆஜராக மாட்டார் என்பதாலும் மேற்படி எதிரியை பிணையில் விடுவிக்க எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டது.

3. இரு தரப்பிலும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்/எதிரி கடந்த 07.02.2026 ம் தேதி முதல் 3 நாட்களாக நீதிமன்ற காவலில் உள்ளதாலும், குற்ற பின்னணி எதுவும் முன்னிறுத்தப்படாததாலும், வழக்கின் விசாரணை ஓரளவு முடிவு பெற்றதாலும் எதிரியை இந்த வழக்கில் நீதிமன்ற காவலில் வைத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று இந்த நீதிமன்றம் கருதி, கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் அவர் பிணையில் விடுவிக்கப்படுகிறார்.

அ. மனுதாரர் அவரும், அவருக்காக இரண்டு பிணையதாரர்களும் ரூபாய் 10,000/–க்கான பிணைமுறி ஆவணம் எழுதிகொடுக்க வேண்டும்.

ஆ. மனுதாரர் சிறையிலிருந்து வெளியே வந்த பிறகு ஒரு மாதம் காவல் நிலையத்தில் வாரம் திங்கள், வெள்ளி ஆகிய கிழமைகளில் காலை 10.00 மணிக்கு ஆஜராகி கையெழுத்து போடுமாறும் உத்தரவிடப்படுகிறது. .

இ. மனுதாரர் இவ்வழக்கு சாட்சிகளை கலைக்கவோ, அழிக்கவோ கூடாது.

ஈ. மனுதாரர் புலன்விசாரணைக்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். தேவைபட்டால் அழைப்பாணையின் பேரில் அவர் எதிர்மனுதாரர் காவல்நிலையத்தில் முன்னிலையாக வேண்டும்.

உ. இவ்வழக்கு முடியும் வரை மனுதாரர் தலைமறைவாக கூடாது. வழக்கு விசாரணையில் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்.

இந்த உத்தரவு என்னால் திறந்த நீதிமன்றத்தில் 09.02.2026 ஆம் தேதி அவையறிய பகரப்பட்டது.

MEENAKSHISUNDARAM VOCHIDAMBARAM
Digitally signed by MEENAKSHISUNDARAM VOCHIDAMBARAM
Date: 2026.02.09 19:11:24 +0530

நீதித்துறை நடுவர்
திருச்செந்தூர்